(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(7).]

# பாராளுமன்றம்

## 13ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 மாச்சு 02 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 மாச்சு 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5690/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 தொடக்கம் 2014 ஓகத்து மாதம் வரையான காலப்பகுதிக்குள் பெல்வத்த மற்றும் செவனகல சீனிக் கம்பனிகளால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எத்தனோலின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி எத்தனோலில் மதுபான உற்பத்திக்காகவும் நறுமணப்பொருட்கள் உற்பத்திக்காகவும் ஈடுபடுத்தப்பட்ட அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மதுபானம் மற்றும் நறுமணப்பொருட்கள் உற்பத்திக்காக ஒரு லீற்றருக்கு அறவிடப்படுகின்ற வரித் தொகை யாது;

(iv) மேற்படி எத்தனோலைப் பெற்றுக்கொண்ட மதுபான உற்பத்திக் கம்பனிகள் மற்றும் நறுமணப்பொருள் உற்பத்திக் கம்பனிகளின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5708/ '14

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தினுள் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வீடமைப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஜன செவன பத்து இலட்சம் வீடுகள் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கையின் கீழ் வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கு எழுத்துமூல வாக்குறுதியொன்று வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வாக்குறுதியின்படி இற்றைவரை வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5845/ '14

கௌரவ மொஹமட் அஸ்லம்,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாநகரசபை ஆளுகைப் பிரதேசத்தில், இலக்கம் 32, குப்பியாவத்தை மேற்கு பிரிவுக்குரிய, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல மாவத்தையில், ஆதனவரி இலக்கம் 108 மற்றும் 108/20 ஆகிய இடங்களின் புகுமுக வழிகளுக்கு தடையேற்படும் விதத்தில், நகர பொது மலசலகூடத் தொகுதியின் மீது அத்துமீறிய நிர்மாணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) கொழும்பு மாநகரசபையின் ஒரு சில உத்தியோகத்தர்களின் அனுசரணையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி அத்துமீறிய நிர்மாணிப்பு காரணமாக பொது மலசலகூடத் தொகுதி தனியார் சொத்தொன்றாக மாறியுள்ளதால், மேற்படி நிர்மாணிப்பை தாமதமின்றி அகற்ற நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5875/ '15

கௌரவ லலித் திசாநாயக்க,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளிலிருந்தும் அறிக்கையிடப்பட்டுள்ள அரசியல் வன்முறைச் செயல்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வன்முறைச் செயல்களால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட அரசியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகளில் வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5691/ '15

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்த எத்தனோல் தொகை வருடாந்த ரீதியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மதுபான உற்பத்தி மற்றும் நறுமணப் பொருட்கள் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் எத்தனோலுக்காக அறவிடப்படும் வரி எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 03 வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட எத்தனோலின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் நறுமணப் பொருட்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மதுபான உற்பத்தி மற்றும் வாசனைப் பொருட்கள் உற்பத்திக்கென எத்தனோல் இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 மார்ச்சு 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5692/ '14

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமக்காரர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு பூர்த்திச்செய்ய வேண்டிய தகைமைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உடுகிந்த, மெதவெல, கரகஹஉல்பத்த எனும் முகவரியில் வசிக்கும் திருமதி யஸவதி குமாரிஹாமி ஜயசுந்தர கமக்காரர் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதற்கு கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபையில் பதிவு செய்துள்ளாரா என்பதையும்;

(ii) இவர் கமக்காரர் ஓய்வூதியத்தை பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளாரா என்பதையும்;

(iii) இவர் அதற்கான தகுதியை பெற்றிருப்பின், இற்றை வரை இவருக்கு கமக்காரர் ஓய்வூதியம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5876/ '15

கௌரவ லலித் திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் யார் என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட நபருக்கு இலங்கையில் பிரசாவுரிமை உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இவர் இலங்கைப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்ட திகதி யாது என்பதையும்;

(iv) இவர் இலங்கைப் பிரசையல்ல எனின், இவருக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை வகிக்கும் ஆற்றல் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5877/ '15

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மிக நீளமான கடற்கரை பிரதேசம் உரித்தான புத்தளம் மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகமொன்று அல்லது மீன்பிடி இறங்குதுறை ஒன்று தாபிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கம் சமர்ப்பித்த 2013/2014 வரவுசெலவுத்திட்டப் பிரேரணைகளில் வென்னப்புவை பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை நிர்மாணிப்பதற்கான பிரேரணையொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணைக்கு அமைய, வென்னப்புவை பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிப்பதில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5891/ '15

கௌரவ லசந்த அலகியவன்ன,— நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டினுள் காணப்படுகின்ற சுத்தமான குடிநீர் வசதியுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நாட்டிலுள்ள மொத்த வீடுகளில் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையின் சதவீதம் யாதென்பதையும்;

(iii) குடிநீர் வசதி வழங்கப்படவேண்டியுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வீடுகளுக்கு குடிநீர் வசதிகளை வழங்குதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் தீமானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5693/ '14

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 04 வருட காலத்தினுள் இலங்கை வெளிநாடுகளுக்கு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கிய நிதிசார்ந்த மற்றும் ஏனைய உதவிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதிசார்ந்த மற்றும் ஏனைய உதவிகள் எவ்வாறான தேவைகளுக்காக வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி நிதியுதவிகளுக்கான நிதி மற்றும் ஏனைய உதவிகள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5892/ '15

கௌரவ லசந்த அலகியவன்ன,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதியளவில் நாட்டினுள் இருந்த சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு மாதாந்த நிவாரணத் தொகை வகுதிகளின்படி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிவாரணங்களும் உள்ளடங்கலாக கிடைக்கின்ற ஒவ்வொரு மாதாந்த நிவாரண வகுதியின்படி 2015 சனவரி 31 ஆம் திகதியளவில் இருந்த சமுர்த்தி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் குறித்த நிவாரணம் வழங்குவதற்கு செலவிடப்பட்ட பணத்தொகையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நூறு நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களும் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு மாதாந்த நிவாரண வகுதியின் கீழ் சமுர்த்தி நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வகுதியின் கீழ் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு மாதாந்தம் செலவாகின்ற பணத்தொகை

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5895/ '15

கௌரவ கீதாஞ்சன குணவர்தன,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிஸ்சாவளை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் பராப்பளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில், ஹல்பேவத்த, மின் விசிதுருகம கிராமத்தில் மக்கள் வசிக்கும் காணிகளின் உரிமையை ஒழுங்குமுறைப்படுத்தித் தருமாறு குறிப்பிட்ட மக்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு இணங்குகின்றனரா என்பதையும்;

(iii) ஆமெனில், குறிப்பிட்ட காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவிஸ்சாவளை தேர்தல் தொகுதியில் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில், தம்போர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 10 ஏக்கர் காணி, கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தக் காணிகளை காணிக் கச்சேரி மூலம் அந்தப் பிரதேச மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?